5. உடலுறவுகொள்ளுதல்

6. வேட்டையாடுதல்

7. திருமண ஒப்பந்தம் செய்தல்

8. உடலில் அணியும் வண்ணம் தைக்கப்பட்ட ஆடைகளை அணிதல் (ஆண்களுக்கு மாத்திரம் ஹராம்)

9. தலையை மூடுதல் (ஆண்களுக்கு மாத்திரம் ஹராம்)

10. முகமூடி அணிதல் (பெண்களுக்கு மாத்திரம் ஹராம்)

11. கையுறை அணிதல் (பெண்களுக்கு மாத்திரம் ஹராம்)


(1) ஒருவர் ஷரத்திட்டு உம்ராவை செய்ய முடியாமல் போனால் அவருக்கு குற்றம் ஏதும் கிடையாது. இல்லையேல் தடுக்கப்பட்டவரின் சட்டம்

(2) தல்பியா கூறும் முறை :

(லப்பைக அல்லாஹும்ம லப்பைக் லப்பைக லா ஷரீக லக லப்பைக் இன்னல் ஹம்த வன்னிஃமத லக வல்முல்க் லா ஷரீக லக்)


தவாபின் போது: ஒருவர் தவாபும் ஸஃயும் செய்யும் போது இறையச்சத்துடனும் இறைவனின் பொருத்தத்தை நாடியவனாகவும் இருப்பதோடு துஆவிலும் திக்ருகளிலும் ஆர்வமாக ஈடுபடவேண்டும்













تاميلي
TAMIL

# عمرتي

# உம்ராசெய்வதுஎப்படி


தயாரித்தவர்
யாஸிர் அல்புஹைத்
إعداد : ياسر بن محمد الفهيد
மேற்பார்வை
சேக் ஸஅத் அல்ஹஸ்லான்
راجعة الشيخ / سعد الخثلان
தமிழில்
முஹம்மத் ஐயூப்




| எ | செயல் | எ | சட்டம் | செய்ய வேண்டிய காரியங்கள் | தவறினால் சட்டம் |
|---|---|---|---|---|---|
| 1 | (முதலாவது ருக்ன்) இஹ்ராம் இஹ்ராமிற்காக நிய்யத்து வைத்தல் | 1 | சுன்னத்து | குளித்து சுத்தமாகி நறுமணம் பூசுதல் (நறுமணம் பூசுவது ஆண்களுக்கு மாத்திரம்) | ஒன்றுமில்லை |
| | | 2 | சுன்னத்து | சுத்தமான வெள்ளை இஹ்ராம் ஆடை அணிதல். பெண்கள் விரும்பும் ஆடையை அணியலாம். | குற்றமில்லை |
| | | 3 | வாஜிப் | மீகாத்தில் நிய்யத் வைத்தல் (லப்பைக உம்ரதன்) அல்லது (அல்லாஹும்ம லப்பைக உம்ரதன்) என்று சொல்ல வேண்டும் | மறுபடியும் மீகாத் வந்து நிய்யத் வைத்தல் அல்லது பித்யா கொடுத்தல் |
| | | 4 | சுன்னத்து | ஒரு தொழுகைக்குப் பின் உம்ராவின் கிரியைகளை ஆரம்பித்தல் உதாரணமாக வுழூவுடைய சுன்னத் தொழுகைக்குப் பின் | குற்றமில்லை |
| | | 5 | மக்ரூஹ் | மீகாத் வருமுன் உம்ராவிற்காக நிய்யத்து வைத்தல் | குற்றமில்லை |
| | | 6 | சுன்னத்து | நோய் போன்ற ஏதாவது காரணத்தினால் உம்ரா தடைபடும் என்ற பயம் ஏற்பட்டால் (அல்லாஹும்ம லப்பைக உம்ரதன் பதின் ஹபஸனீ ஹாபிசுன் பமஹில்லீ ஹய்சு ஹபஸ்தனீ) என்று ஷரத்துடன் நிய்யத்து வைத்துக் கொள்ளலாம் | எண் 1ஐப் பார்க்க |
| | | 7 | ஆகுமானது | மீகாத் பள்ளி அல்லாத இடத்தில் இஹ்ராம் அணிதல் | குற்றமில்லை |
| | | 8 | சுன்னத்து | உம்ராவிற்கு நிய்யத்து வைத்ததிலிருந்து தொடர்ந்து தல்பியா கூறுவது (ஆண்கள் சப்தமாக) | (எண் 2ஐப் பார்க்க) ஒன்றுமில்லை |
| 2 | (இரண்டாவது ருக்ன்) தவாப் ஏழு சுற்றுக்கள | 1 | சுன்னத்து | மக்காவினுல் நுழையும் போது குளித்தல் | குற்றமில்லை |
| | | 2 | வாஜிப் | தவாபின் போது சுத்தமாக இருத்தல் (பெருந்தொடக்கை விட்டு நீங்கி வுழூவோடு இருத்தல்) | தவாப் கூடாது |
| | | 3 | சுன்னத்து | மஸ்ஜிதுல் ஹராமினுள் நுழையும் போது வலது காலை வைத்து (பிஸ்மில்லாஹி வஸ்ஸலாது வஸ்ஸலாமு அலா ரஸு லில்லாஹ் அல்லாஹும் ம்மப்தஹ்லீ அப்வாப ரஹ்மதிக அீஆது பில்லாஹில் அழீம் வபிவஜ்ஹிஹில் கரீம் வபிசுல்தானிஹில் கதீம் மினஷ்ஷைத்தானிர்ரஜீம் | குற்றமில்லை |
| | | 4 | சுன்னத்து | இஹ்ராம் நிய்யத்து வைத்ததிலிருந்து தவாப் ஆரம்பிக்கும் வரை தொடர்ந்து தல்பியா சொல்லல் | குற்றமில்லை |
| | | 5 | வாஜிப் | கஃபாவை தன் இடது பக்கமாக ஆக்கி ஹஜருல் அஸ்வதிற்கு நேராக இருந்து தவாபை ஆரம்பித்தல் | தவாப் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது |
| | | 6 | சுன்னத்து | தவாபின் ஒவ்வொரு சுற்றிலும் ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிடல் அல்லது கையால் தொட்டு முத்தமிடல் அல்லது கையால் சுட்டிக்காட்டி அல்லாஹு அக்பர் என்று சொல்லுதல் (7வது சுற்று முடியும் போதும் சொல்ல வேண்டும்) | குற்றமில்லை |
| | | 7 | சுன்னத்து | ஆண்கள் மாத்திரம் தவாபின் முதல் மூன்று சுற்றிலும் விரைவாக நடப்பது | குற்றமில்லை |
| | | 8 | சுன்னத்து | தவாபில் ஆண்கள் தங்கள் மேல் சால்வையை வலது புஜத்தை திறந்து இடது புஜத்தை மூடி அணிதல் | குற்றமில்லை |
| | | 9 | சுன்னத்து | தவாபின் போது (முடிந்தால்) ருக்னுல் யமானியை முத்தமிடாமல் தொடுவது மாத்திரம் (முடியவில்லை என்றால் சுட்டிக்காட்டுவதோ தக்பீரோ சொல்லாமல் கடந்து செல்லுதல்) | குற்றமில்லை |
| | | 10 | சுன்னத்து | தவாபின் போது ஓய்வுக்காக அல்லது தொழுகைக்காக அல்லது வேறு மாடிக்கு மாறுவதற்காக சிறிது தாமதித்தல் | குற்றமில்லை |
| | | 11 | சுன்னத்து | ருக்னுல் யமானிக்கும் ஹஜருல் அஸ்வதுக்கும் இடையில் (ரப்பனா ஆதினா பித்துன்யா ஹஸனதன் வபில் ஆகிரதி ஹஸனதன் வகினா அதாபன்னார்) என்று ஓதவேண்டும் | குற்றமில்லை |
| | | 12 | சுன்னத்து | தவாபின் சுற்றுக்களில் துஆ கேட்பது ஆனால் ஒவ்வொரு சுற்றுக்கும் குறிப்பிட்ட துஆ கிடையாது | சுன்னத்து |
| 3 | (சுன்னத்து) மகாமு இப்றாஹீம் எனும் இடத்தின் பின்னால் தொழுவதும் ஸம்ஸம் நீர் அருந்துவதும் | 1 | கூடும் | தவாபின் பின் புஜங்களை மூடுவது (தொழுகையின் போது கட்டாயம்) | குற்றமில்லை |
| | | 2 | சுன்னத்து | தவாப் முடிந்த பின் மகாமு இப்ராஹு முக்குப் பின்னால் இரண்டு ரக்அத்துக்கள் தொழுதல் | குற்றமில்லை |
| | | 3 | சுன்னத்து | மகாமு இப்ராஹு முக்கு அருகில் (வத்தகதிதூ மின் மகாமி இப்ராஹீம முஸல்லா) என்ற ஆயத்தை ஓதுதல் | குற்றமில்லை |
| | | 4 | கூடும் | தவாபின் சுன்னத்தை பள்ளியில் எந்த இடத்திலும் தொழுதல் | குற்றமில்லை |
| | | 5 | சுன்னத்து | முதலாவது ரக்அத்தில் (குல் யா அய்யுஹல் காபிரூன்) ஐயும் இரண்டாவது ரக்அத்தில் (குல் ஹு வல்லாஹு அஹத்) ஐயும் ஓதுதல் | குற்றமில்லை |
| | | 6 | சுன்னத்து | ஸம்ஸம் நீரை வயிறு நிரம்பும் வரை அதிகமாக அருந்துதல் | குற்றமில்லை |
| | | 7 | சுன்னத்து | தவாபின் சுன்னத்துக்குப் பின் முடிந்தால் ஹஜருல் அஸ்வதை முத்தமிடல் (சைகை செய்வது கூடாது) | குற்றமில்லை |
| 4 | (மூன்றாவது ருக்ன்) ஸஈ ஏழு சுற்றுக்கள் செல்வது ஒரு சுற்று, திரும்பி வருவது இன்னொரு சுற்று | 1 | சுன்னத்து | ஸஈயின் தொடக்கத்தில் ஸஃபாவை நெருங்கியவுடன் (இன்னஸ்ஸபா வல் மர்வத மின் ஷஆயிரில்லாஹ்) என்றும் (அப்தஉ பிமா பதஅல்லாஹு பிஹி) என்றும் சொல்லுதல் | குற்றமில்லை |
| | | 2 | சுன்னத்து | ஸபா மலையின் மீது ஏறுதல் (ஏறாமலும் இருக்கலாம்) | குற்றமில்லை |
| | | 3 | சுன்னத்து | ஸபா மர்வா மலைகளின் மேல் ஏறி பின் வரும் துஆவை மூன்று முறை ஓதுதல் (அல்லாஹு லில்லாஹ் அல்லாஹு அக்பர் லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக லஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹு வ அலா குல்லி ஷய்இன் கதீர் லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு அன்ஜஸ வஃதஹு வநஸர அப்தஹு வஹஸமல் அஹ்ஸாப வஹ்தஹு ) | குற்றமில்லை |
| | | 4 | சுன்னத்து | ஆண்கள் மாத்திரம் பச்சை விளக்கிட்ட அடையாளங்களுக்கு மத்தியில் ஓடுதல் | குற்றமில்லை |
| | | 5 | சுன்னத்து | ஸஈயின் எல்லா சுற்றிலும் துஆ கேட்பது ஒவ்வொரு சுற்றுக்கும் குறிப்பிட்ட துஆ கிடையாது | குற்றமில்லை |
| | | 6 | ஆகுமானது | ஸஈயின் போது தொழுகைக்காக அல்லது ஓய்வுக்காக (அதிகம் நீடிக்காமல்) சற்று தாமதித்தல், அமருதல் | குற்றமில்லை |
| | | 7 | சுன்னத்து | ஸஃபாவின் போது சுத்தமாக (வுழூவோடு) இருத்தல் (வாஜிப் இல்லை) | குற்றமில்லை |

5. தலை முடியை மழித்தல் அல்லது முழுவதையும் குறைத்தல், சட்டம் வாஜிப், செய்ய வேண்டிய காரியம், தவாஃபிற்கும் ஸஃயிக்கும் தலைமுடியை மழித்தல் அல்லது கத்தரித்தல் (பெண்கள் கூந்தலில் ஒரு விரல் மடிப்பளவு கத்தரித்தல்). இதை விட்டவர் குற்றப்பரிகாரமாக ஒரு ஃபித்யாகொடுக்க வேண்டும்.

தலை முடியை முழுமையாக மழித்தல் சுன்னத்தாகும்.

நபி (ஸல்) அவர்கள் இறைவா! தலை முடியை மழிப்பவர்களுக்கு அருள் புரிவாயாக என பிரார்தனை செய்தார்கள் .குறைத்து வெட்டுபவர்களுக்கும் என ஸஹாபாக்கள் கூற நபி (ஸல்) அவர்கள் மீண்டும் தலை முடியை மழிப்பவர்களுக்கு அருள் புரிவாயாக என பிரார்தனை செய்தார்கள் மூன்று முறை மழிப்பவர்களும் பிறகு குறைத்து வெட்டுபவர்களுக்கும் நபி (ஸல்) பிரார்த்தனை செய்தார்கள். தலை முடியை மழிக்காது குறைத்து வெட்டினால் குற்றம் இல்லை.

இஹ்ராமின் போது ஹராமான காரியங்கள்

1. தலை முடி அல்லது வேறு முடிகளை நீக்குதல்
2. நகம் வெட்டுதல்
3. மணம் பூசுதல்
4. மனைவியோடு இன்பம் அனுபவித்தல்